கருத்துருவை சம்பந்தப்பட்ட வனத் துறை அதிகாரிகளுக்கு அவர் கொடுத்தாரேயானால், அங்கிருக்கின்ற சரணாலயத்தில், பறவைகளின் வரவைப் பொறுத்தும், நிதிநிலையை ஆராய்ந்தும், அதற்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

புதிய மின்மாற்றி

***6044—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை ஊராட்சி ஒன்றியம், சேமன்வயல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய சேமன்வயல் கிராமத்தில், புதியதாக ஒரு 100 KV மின்மாற்றியுடன் 1.4 கி.மீ. தூரத்திற்கு உயர் மின்னழுத்தக் கம்பிகள் அமைப்பதற்குத் தேவையான திட்டப் பணிகள் தயார் செய்து, பணிகள் துவங்கவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், இருக்கையில் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

[2017 ஜூலை 3

முற்பகல் 10-15

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமத்தைப் பொறுத்தமட்டில், மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது. இரவு நேரங்களிலே எரியக்கூடிய விளக்குகள் அங்கே போதுமானதாக இல்லை. நீங்கள் சொன்ன பணிகளை உடனடியாகச் செய்து தருவீர்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி நான் ஏற்கெனவே சொன்னேன். திட்டப் பணிகள் தயாராக இருக்கின்றன. இன்னும் ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள் திட்டப் பணிகள் முடிக்கப்படும். அதன்பின், கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்குள் மின்மாற்றி அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் கடந்த ஆட்சியின்போது தேனி மாவட்டம், ஹைவேவிஸ் பேரூராட்சியில் 2 அணைக்கட்டுகள் கட்டப்பட்டன. அங்கே நீர்நிலைகள் நிறைய இருக்கின்றன. அந்த நீரை tunnel வழியாக கீழே இறக்கும்போது அதிலிருந்து மின்சாரம் எடுப்பதற்குரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வறிக்கை இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலே மின்மாற்றிகள் அமைப்பதற்காக விவசாயிகளுடைய நிலங்களை எடுக்க வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே 720 கிலோ வோல்ட் மின்மாற்றிகளுக்கான வழித்தடம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக அனைத்து விவசாயிகளிடமிருந்தும் ஒரு செண்ட் இடம் எடுக்கப்படுகிறது. அந்த விவசாயிகளை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே, நம்முடைய மின்சாரத் துறை, அந்த இடங்களைக் கொடுக்கக்கூடிய விவசாயிகளுக்கு, இலவச விவசாய மின்னிணைப்பில் முன்னுரிமை கொடுக்க ஆவன செய்யுமா? அப்படி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தால், அவர்கள் இடத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். பல மின் திட்டங்களுக்கு இடம் கிடைக்காமல் இருக்கின்ற காரணத்தால், இடம் வழங்குகின்ற விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தவரை, விவசாயிகளிடமிருந்து நிலம் எடுக்கின்றபோது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இலவச விவசாய மின்னிணைப்பை முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அப்படி ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. எதிர்காலத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.